www.Padasalai.Net

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின்
செயல்முறைகள் சென்னை -06

ந.க.எண்.4913/SCERT/E4/169/2023 நாள்.18.06.2024

| | |
|---|---|
| பொருள்: | மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சி – இணையத்தளம் மூலம் மண்டல வாரியாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 9–12 வகுப்புகளை கையாளும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்குதல் – சார்பு |
| பார்வை: | 1.மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சட்டபேரவை அறிவிப்புகள் 2023–2024–அறிவிப்பு எண்.16<br>2.பள்ளிக் கல்வித்துறைப் பயிற்சி அட்டவணை 2024–25 |

----------------

பார்வையில் கண்டுள்ள பள்ளிக் கல்வித்துறை சட்டமன்றப் பேரவை அறிவிப்பு எண் 16–ல் "வளரிளம் பருவத்தினர் பெருந்தொற்றுக் காலத்தில் உளவியல் ரீதியாக பல்வேறு பிரச்சனைகளைச் சந்தித்துள்ளனர். அதனை ஈடுசெய்யும் வகையிலும், அவர்களின் சமூக மனவெழுச்சி நலனை மேம்படுத்தவும், நேர்மறை எண்ணங்களை உருவாக்கிடவும், மகிழ்ச்சியாகக் கற்றலில் ஈடுபடுவதற்கு ஏதுவாகவும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் பயிற்சிகள் வழங்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சார்ந்து 2022–23, 2023–24 கல்வியாண்டுகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 9–12 வகுப்புகளைக் கையாளும் ஆசிரியர்களுக்கும் அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது2024 – 2025 ஆம் கல்வியாண்டிற்கான மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சி ஆசிரியர்களுக்கு 19.06.2024 முதல் 22.06.2024 வரை நான்கு நாள்கள் இணையத்தளம் மூலம் மண்டலவாரியாக வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சிக் கட்டகம் 20 முதல் 30 நிமிடங்களில் செய்திடத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, ஆசிரியர்கள், மின்னுருவாக்கம் செய்யப்பட்ட பயிற்சிக் கட்டகங்களை பள்ளியில் உள்ள மடிக்கணினி, உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களில் உள்ள கணினிகள் மூலம் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நாள்களில் நிறைவு செய்யவேண்டும். எனவே ஆசிரியர்கள் http://lms.tnsed.com/ என்ற இணையமுகவரியில் தங்களது EMIS ID, Password பயன்படுத்தி My Courses ல் சென்று மின்னுரு கட்டகங்களை முடித்தல் வேண்டும்.

ஆசிரியர்களுக்கான பயிற்சியைத் தொடர்ந்து, மாணவர்களுக்கு உயர்தொழில்நுட்ப ஆய்வகம் மூலம் 24.06.2024 முதல் 28.06.2024 வரை வழங்கப்பட உள்ளது. மாணவர்களுக்கான மின்னுருவாக்கம் செய்யப்பட்ட கட்டகங்கள் ஒவ்வொன்றும் 20 நிமிடத்தில் செய்திடத்தக்க வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து

www.Padasalai.Net

மாணவர்களும் 2024-2025 கல்வியாண்டு நாட்காட்டியில் குறிப்பிட்டுள்ளவாறு இச்செயல்பாடுகளை தவறாது எடுத்துக்கொள்வதை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் உறுதிசெய்ய அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: 1. Zone Wise Details

2. கல்வியாண்டு நாட்காட்டி

18/6/24

இயக்குநர்க்காக

18.6.2024

www.Padasalai.Net

இணைப்பு: 1.Zone wise details

| | | |
|---|---|---|
| Chennai Zone | 1. Chennai<br>2. Tiruvallur<br>3. Kanchipuram<br>4. Chengalpattu<br>5. Tiruvannamalai<br>6. Ranipet<br>7. Vellore<br>8. Tiruppathur<br>9. Cuddalore | 19.06.2024 |
| Trichy Zone | 1. Trichy<br>2. Perambalur<br>3. Ariyalur<br>4. Karur<br>5. Thanjavur<br>6. Thiruvarur<br>7. Pudukottai<br>8. Nagapattinam<br>9. Mayiladuthurai<br>10. Salem | 20.06.2024 |
| Coimbatore Zone | 1. Coimbatore<br>2. Erode<br>3. Dharmapuri<br>4. Krishnagiri<br>5. Namakkal<br>6. Kallakurichi<br>7. The Nilgiris<br>8. Tiruppur<br>9. Villupuram | 21.06.2024 |
| Madurai Zone | 1. Madurai<br>2. Theni<br>3. Dindigul<br>4. Virudhunagar<br>5. Sivagangai<br>6. Tirunelveli<br>7. Thenkasi<br>8. Thoothukudi<br>9. Ramanathapuram<br>10. Kanniyakumari | 22.06.2024 |

www.Padasalai.Net

இணைப்பு: 2.

## மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் வகுப்பு கால அட்டவணை

| மாதம் | S.No | நிகழ்வு |
|---|---|---|
| ஜூன் | 1 | Baseline Assessment |
| | 2 | நம்ம படம் |
| | 3 | ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை |
| | 4 | உறவு வேலி |
| | 5 | சுய ஊக்கம் கொள்ளல் |
| ஜூலை | 6 | உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல் |
| | 7 | மனவெழுச்சிகளைக் கையாளுதல் |
| | 8 | பத்திரமாய் பார்த்துக்கொள்ளுங்கள் |
| | 9 | 5-4-3-2-1 நிலைநிறுத்தும் உத்திகள் |
| | 10 | சவால்களைக் கையாளுதல் |
| ஆகஸ்ட் | 11 | உங்களுக்கான கடிதம் |
| | 12 | கவனம் குவித்தல் |
| | 13 | திறன்மிகு (SMART) இலக்குகள் |
| | 14 | நேர மேலாண்மை மற்றும் பணிகளைப் பட்டியலிடுதல் |
| | 15 | தோல்விகளையும் விமர்சனங்களையும் எதிர்கொள்ளுதல் |
| அக்டோபர் | 16 | பொமொடோரோ பயிற்சி முறை |
| | 17 | உன்னை அறிந்தால் |
| | 18 | நேர்மறையாகப் பேசுதல் |
| | 19 | மனவெழுச்சிச்சக்கரம் |

www.Padasalai.Net

## மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் வகுப்பு கால அட்டவணை

| மாதம் | S.No | நிகழ்வு |
|---|---|---|
| நவம்பர் | 20 | மனவெழுச்சிகளை அடையாளம் காணுதல் |
| | 21 | மாற்று மருந்து |
| | 22 | குடும்ப உறுப்பினருக்கு ஒரு வாழ்த்து அட்டை |
| | 23 | கவலை மற்றும் மன அழுத்தத்தைக் கையாளுதல் |
| ஜனவரி | 24 | நிலைநிறுத்தும் உத்திகள் |
| | 25 | மேம்பட்ட மனநிலையை (GROWTH MINDSET) வளர்த்துக் கொள்ளுதல் |
| | 26 | மனதை ஒருநிலைப்படுத்தப் பழகுதல் |
| | 27 | ஆசிரியருக்குக் கடிதம் |
| பிப்ரவரி | 28 | கற்பது எப்படி? – மன வரைபடம் |
| | 29 | மகிழ்ச்சியாகப் படிக்கலாம் |
| | 30 | நல்ல பழக்கங்களை உருவாக்குதல் |
| | 31 | நினைவாற்றலை மேம்படுத்துதல் |
| | 32 | Endline Assessment |

குறிப்பு : • [illegible]



18/6/24
இயக்குநர்
18.6.2024